

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மாணவரணி சார்பில் "மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் நாள்" பொதுக்கூட்டம் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே.எஸ்.ச.இளையசூரியன் வரவேற்பில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் செ.பிரசன்னா, பெ.தெய்வானை, ஆர்.சபா, சிப்காட் பி.சதீஸ்குமார், கோ.அண்ணாதுரை ஆகியோர் ஒருங்கிணைப்பில் புதுக்கோட்டை திலகர் திடலில் நடைபெற்றது. தலைமை கழக பேச்சாளர்கள் தஞ்சை கலைமணி பாரதி, திருவண்ணாமலை மங்களம் பிரபாகரன் , கழக இளம் பேச்சாளர் சொ.தமிழினியன் ஆகியோர் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் பேருரையாற்றினார்கள். முன்னதாக மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, புதுக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, மாநில கழக நிர்வாகிகள் த.சந்திரசேகர், சுப.சரவணன், கே.ஆர்.என்.போஸ், செ. அசோக்பாண்டியன், மாவட்ட கழக நிர்வாகிகள் அரு.வீரமணி, பெ.ராஜேஸ்வரி, துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு.சண்முகம், பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம்.பழனியப்பன், என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், ராப்பூசல் எம். செந்தில்குமார், மாவட்ட அறங்காவல் குழு தலைவர் தவ.பாஞ்சாலன், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், என். சேட்டு, வெ.முத்துகிருஷ்ணன், ஓ.எஸ்.வெங்கடாசலம், மு.பி.ம.சத்தியசீலன், , சி.சண்முகம், மா.தமிழய்யா, ஆர்.ஆர்.சாமிநாதன், புதுக்கோட்டை மாநகர அவைத்தலைவர் அ.ரெத்தினம் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கழக உடன்பிறப்புகள், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்று சிறப்பித்தனர். புதுக்கோட்டை மாநகர இளைஞரணி அமைப்பாளர் செந்தில் கணேஷ் நன்றி கூறினார்.



கோவை கிணத்துக்கடவு அண்ணா திடலில் கோவை தெற்கு மாவட்ட திமுக மற்றும் மாநகர் தெற்கு மாவட்ட திமுக மாணவரணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் கிணத்துக்கடவு பேரூர் கழக செயலாளர் கனகராஜ் தலைமையில் தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரபு வரவேற்புரையில் முன்னாள் அமைச்சர் – கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன், முன்னாள் மத்திய அமைச்சர் கண்ணப்பன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, தலைமைக் கழக பேச்சாளர் சேப்பாக்கம் பிரபாகரன் ஆகியோர் வீரவணக்க நாள் சிறப்புரையாற்றினர். மேலும் கதிர்வேல், செந்தில்குமார், பூரண சந்திரன், அரவிந்த், வசந்த், ராம், புனிதவதி, தண்டாயுதபாணி ஆகியோர் முன்னிலையில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

### சிக்கல் என்.ஆனந்த் தலைமை!

# நாகை வடக்கு ஒன்றிய தி.மு.க. பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் என்.கௌதமன், தொகுதிப் பார்வையாளர் ஆர்.அருள்செல்வம் சிறப்புரை!

நாகை, ஜன. 28 -

நாகை மாவட்டம் நாகை வடக்கு ஒன்றிய தி.மு.க. பாகநிலை முகவர்கள்(பி.எல்.ஏ.2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள்(பி.எல்.சி.) கலந்தாய்வு கூட்டம் சிக்கலில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாகை வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சிக்கல் என். ஆனந்த் தலைமை தாங்கினார். ஒன்றியக் கழக நிர்வாகிகள் அவைத்தலைவர் பி.பாண்டியன், துணைச் செயலாளர் ஏ.முகமது ஜமால், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.சோமு, கே.முத்துராமன், ஒன்றிய பொருளாளர் என்.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு துணை அமைப்பாளர் ஏ. ஷாஜகான் வரவேற்hறர். கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்சசிக் கழகத் தலைவர் என்.கௌதமன், மாநில விவசாய அணி இணைச் செயலாளரும், நாகை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஆர்.அருள் செல்வம் ஆகியோர் சிறப்புரை யாற்றி னார்கள்.

கூட்டத்தில் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கேஸ் வி.செந்தில், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் டி.தமயந்தி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.ஆர்.கே. வினோத், மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் கரிகாலன், டி. மணிகண்டன், சங்கர், கே.நாராயணசாமி, மணிமாறன், கார்த்திகேயன், மற்றும் ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், பாகநிலை முகவர்கள்(பி.எல்.ஏ.2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள்(பி.எல்.சி.) கலந்து கொண்டனர். முடிவில் கிளை செயலாளர் பகருதீன் நன்றி கூறினார்.







